புறம்போக்கு நிலம் இருக்கிறது என்றும் அங்கே அந்தத் தொழிற் சாலையை அமைக்கலாம் என்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபார்சு செய்து அனுப்பியுள்ளார் என்பதும் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே பெரு மளவில் விளைகின்ற மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்துகின்ற விதத்திலே தமிழ்நாட்டிலே குளுக்கோஸ் தொழிற்சாலை, அதாவது குளுக்கோஸ் காம்ப்ளெக்ஸ் நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை 'டிட்கோ' தீவிரமாக பரிசீலித்து வருகிறது. சேலம் மாவட்டத்திலே எந்தத் தாலுக்கா விலே துவங்குவது என்பது, இந்த ஆய்வு முடிந்ததற்குப் பின்னாலே முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அரசு அச்சுத்துறை ஊழியர்களுக்கு மருத்துவ விடுப்பு

வினா எண். 180—திரு. செ. செம்மலை : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசின் மற்றத்துறை ஊழியர்களுக்கு அவர் களுடைய பணிக்காலம் முழுமைக்குமாக 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு அனுமதிக்கப்பட்டு இருக்கும்போது அரசினர் எழுது பொருள், அச்சுத்துறையின் நுட்பப் பணியாளர்களுக்கு மட்டும் (Technical Employees) 12 மாதம் அனுமதிக்கப்பட்டிருப் பதின் காரணம் என்ன ?

(ஆ) அவர்களுக்கும் 18 மாதங்கள் அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :—

(அ) மற்றும் (ஆ) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கென விதிக்கப்பட்டுள்ள விடுமுறை விதிகளின்படி, அவர்களுக்கு 12 மாதங்களே மருத்துவ விடுப்பு உண்டு. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, தொழில் வகையைச் சார்ந்ததா அல்லது அரசுத் துறைவகையைச் சார்ந் ததா என்னும் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளதால், தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு வழங்க வேண்டும் என்னும் கோரிக்கையை மேற்குறித்த கேள்வியின்மீது ஏற்படும் முடிவுக்குப் பின்னரே பரிசீலிக்க இயலும்.

1981 பிப்ரவரி 4]

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினிஸ்டீரியல் சர்வீசிலே உள்ளவர்களுக்கு 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு என்றும், டெக்னிகல் எம்பிளாய்சுக்கு 12 மாதங்கள் மருத்துவ விடுப்பு என்றும் இருப்பது ஏதோ ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துவதுபோல் தோன்றுகிறது. எனவே, டெக்னிகல் எம்பிளாய்சுக்கு ஏதாவது சிறப்பு விடுப்பு கொடுக்க அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் தனித்தனியான விடுப்பு விதி முறைகள் உண்டு. அந்த விதிமுறைகளின்படி தொழில்நுட்பப் பணியாளர்கள் என்ற முறையில் அவர்களுக்கான வேறு சில சலுகைகள் வழங்கப்படுகின்றன. அன்டர் தி ஒர்க்மென்ஸ் காம் பென்சேஷன் ஆக்ட், இவர்களுக்காகப் பணி நேரத்தின்போது ஏற்படும் விபத்தை பொருட்டடுத்தி, இவர்களுக்குப் பாதி சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட்டு வருகின்றது. தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு ஒரு விபத்தின் போது 2 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகள் அல்லது அவர்களுடைய மொத்த பணிக் காலத்திற்கும் இத்தகைய சலுகைகள் வழங்கப் பட்டு வருகின்றன.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் மற்ற ஊழியர்களுக்குக் கிடைப் பதுபோல், அரசு எழுதுபொருள் அச்சக தொழில்நுட்பப் பணி யாளர்களுக்கும் 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு கொடுப்ப தில்லை. ஆனால், அதுபற்றி பரிசீலனை செய்து கொண்டிருப்ப தாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவர்களுக்கும், எழுதுபொருள் அச்சகத் துறையிலே உள்ள பணியாளர்களுக்கும் மற்ற அரசுத் துறைகளிலே உள்ளவர்களுக்கு கொடுப்பதுபோல் 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு கொடுப்பதற்கு சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனைக்குப் பிறகுதான் முடிவெடுக்கப் படும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் எழுப்பிய அதே வினாவில் அடங்கிய பொருள்பற்றி கடந்த நிதிநிலை அறிக்கையின்மீது நான் பேசும்போது குறிப் பிட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகு தொடர் நடவடிக்கையாக அரசு சில முடிவுகளை எடுப்பது வழக்கம். ஆனால், 7, 8 மாதங்கள் ஆகியும் இந்த விஷயம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக, ஆலோசனையில் இருப்பதாக

அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த ஆலோசனையை விரைவுபடுத்தி, சீக்கிரமாக முடிவெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

2. உரிமைப் பிரச்சினை.

திரு. ரகுமான்கான் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு டாக்டர் சமரசம் அவர்கள் 246-வது விதியின்கீழ் அவை உரிமை மீறல் பற்றிய அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். இந்தப் பிரச்சினையை எழுப்ப நான் அனுமதியளிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 247-ன் கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றினை எழுப்ப, பேரவைத் தலைவர் அவர்களின் இசைவைக் கோருகிறேன்.

கடந்த ஜனவரி 24 ஆம் தேதியன்று இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் கலந்துக் கொண்டு பேசுகையில் வன இலாக்கா சம்பந்தமாக 'ரெட் சான்டல்ஸ்' மர ஏற்றுமதியில் ஒரு பெரிய தவறு அல்லது ஊழல் அரசுக்குத் தெரிந்து வேண்டுமென்றே நடைபெற்றதாக பகிரங்கமாக குற்றம் சாட்டும் வகையில் கூறி அதற்கான ஆதாரத்தை அவர் தரத் தயாராக இருப்பதாகக் கூறி, மேலும் அரசினால் அதன் மீது போடப்பட்ட வழக்குகளும், அதற்கான பொறுப்பு வகிக்கும் அமைச்சரால் அரசாணை வெளியிடப்பட்டு, அந்த அரசாணையும் கையில் வைத்திருப்பதாகக் கூறினார். மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் விளக்கமாக ஒரு தன்னிலை விளக்கத்தினை அறிவித்துள்ளார்கள். இதனால் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் வேண்டுமென்றே இந்த அவைக்கு பொறுப்பான அமைச்சர் மீது களங்கம் கற்பிக்கும்